[1969 செப்டம்பர் 12

இணைப்பு I.

[87-88-ம் பக்கங்களில் 242-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

உதகை சீருலா பயணிகள் போக்குவரத்து ஆலோசனைக் குழு 1968-ம் ஆண்டு மே 9-ம் தேதியன்று எடுத்த தீர்மானங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. **உதகையில் இளைஞர் விடுதி ஒன்றைக் கட்டுதல்.**—நீலகிரி மாவட்டத்திலுள்ள சீருலா அதிகாரி, அரசாங்கக் கலைக் கல்லூரி முதல்வர், மாவட்டத்தின் சில தொழிலதிபர்கள் போன்றோர் சிலரை உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொண்டு, நீலகிரியிலுள்ள இளைஞர் விடுதிக்காக மாவட்ட விளையாட்டுக் கழகத்தை உள்ளூர் குழுவாக நியமிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. கட்டப்படவிருக்கும் இளைஞர் விடுதியை உள்துறை விளையாட்டு அரங்கத்தின் அருகிலேயே கட்டினால் இந்த விடுதியில் தங்க வரும் இளைஞர்களுக்கும் இந்த இடத்திற்கு வருகிற விளையாட்டு வீரர்களுக்கும் பயன்படுவதாக இந்த விடுதி அமையும் என்று தலைவர் ஆலோசனை தெரிவித்தார்.

இது குறித்து முனைந்து முயற்சியெடுக்குமாறு சீருலா போக்குவரத்து ஆலோசனைக் குழுவின் செயலாளர் கேட்டுக்கொள்ளப் பட்டார்.

2. **இரண்டாவது பருவத்தில் கலைவிழா.**—எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன—

(அ) உதகை விளையாட்டு அரங்கில் செப்டம்பர் 28-ம் தேதியன்று குழு நடனம், உடை அணிவகுப்பு ஆகியவற்றை நடத்துதல்.

(ஆ) உள்ளூர் நடிப்புக் கலை திறமைக்கு வாய்ப்பளிக்கும் வகையில் நாட்டியம், நாடகம், இசை நிகழ்ச்சிகள் நடத்தல்.

(இ) உதகையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தும்படி அனைத்திந்திய விளையாட்டுக் கழகத்தைக் கேட்டுக் கொள்ளுதல்.

3. **நீலகிரியில் அருங்கலைப் பொருள் அல்லது நினைவுப் பொருள் தயாரித்தல்.**—நீலகிரி மாவட்டத்திலுள்ள மூலப் பொருள்களையும் கைத்திறனையும் பயன்படுத்தி இம் மாவட்டத்திற்கு நினைவுப் பொருளாக எதைத் தயாரிக்கலாம் என்பது பற்றி ஆலோசனை கூறுமாறு தொழில்-வாணிகத் துறை இயக்குனரை எழுதிக்கேட்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிற தீர்மானங்கள்.

4. **நகராட்சி சாலைகளின் நிலை.**—சாலையிலுள்ள குண்டு குழிகள் அனைத்தையும் சீர்படுத்தவேண்டுமென்று நகராட்சியைக் கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்துஸ்தான் போட்டோ தொழிற்சாலையிலிருந்து படைக்கலம் தாங்கிய காவல் துறையினரின் குடியிருப்புகளுக்குச் செல்லும் சாலையிலுள்ள குண்டு குழிகளைச் சரி செய்ய வேண்டும்.

1969 செப்டம்பர் 12]

5. கரும்பாலப் பகுதியிலும், சாண்டி-நல்லாவிலும், **அனுமதி பெறுமல் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளை அகற்றுதல்.**—இது குறித்து ஆவனவற்றைச் செய்யுமாறு இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த (நெடுஞ்சாலை) உதவிப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

6. **கரும்பாலப் பகுதியின் அருகிலுள்ள கடைகளை நல்ல சுகாதார முறையில் பேணி வருதல்.**—இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்குமாறு இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த உதகை தாசில்தாரிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டளையிட்டார்.

7. **தசராவின்போது பெங்களூர் தினத்தாள்களில் நீலகிரி பற்றி விளம்பரம் செய்தல்.**—விளம்பரம் செய்வது குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு செய்தி-விளம்பரத் துறை இயக்குநரைக் கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

8. **நிழல் தரும் மரங்களின்மீது சுவரொட்டிகளை ஒட்டுதல்.**—நகராட்சி எல்லைகளுக்குள் உள்ள நிழல்தரும் மரங்களில் விளம்பர சுவரொட்டிகளை ஒட்டுவதால் நகரின் அழகை அவை கெடுப்பதால் பொதுமக்கள் அவ்வாறு சுவரொட்டிகளை ஒட்டாதவாறு செய்யும்படி நகராட்சியை வேண்டிக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

The following decisions were taken by the Ootacamund Tourist Traffic Advisory Committee on 9th May 1968 :—

1. *Construction of a Youth Hostel at Ootacamund.*—It was resolved to make the District Sports Council as a Local Committee for the Youth Hostel in the Nilgiris with a few co-opted members like Tourist Officer, Principal, Government Arts College and a few industrialists of the district. The President suggested that the proposed Youth Hostel can be constructed near the indoor stadium so that the Hostel can serve the visiting athletes and the youth hostellers.

The Secretary of the Tourist Traffic Advisory Committee has been asked to initiate action in the matter.

2. *Cultural Programme during second season.*—Resolved—

(a) to have a Ball and a Fashion Parade on 28th September at the Ootacamund Stadium;

(b) to have a series of dance, drama and music, giving opportunity to the local histrionic talents and organisation; and

(c) to request All India Sports Council to hold their annual championship events at Ootacamund.

3. *Manufacture of Curio or Memento on the Nilgiris.*—Resolved to address the Director of Industries and Commerce to suggest and manufacture a suitable memento on the Nilgiris utilising the raw materials and the skill of the district.

Other Resolutions.

4. *Condition of municipal roads.*—Resolved to move the Municipality to repair all the pot holes and particularly the road leading from H.P. Factory to Armed Police Quarters.

5. *Removal of unauthorised signboards by block bridge and Sanndinallah.*—The Assistant Engineer (Highways) who was present at the meeting has been requested to do the needful in the matter.

6. *Maintenance of shops in better sanitary condition near black bridge.*—The Collector instructed the Tahsildar, Ootacamund, who was present at the meeting to do the needful in the matter.

7. *Giving publicity on the Nilgiris in Bangalore dailies during Dasara time.*—Resolved to address the Director of Information and publicity to do the needful in the matter of publicity.

8. *Pasting of posters on the avenue trees.*—Resolved to move the municipality to prevent people from pasting publicity posters on the avenue trees inside the municipal limits as the same is marring the beauty of the town.

இணைப்பு 2.

[91-ம் பக்கத்திலுள்ள 249-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) & (இ).—வைகை கால்வாய்களை 3.94 கோடி மதிப்பீட்டுச் செலவில் புதுப்பித்தலுக்கான ஒரு திட்டத்திற்கு 1968 மார்ச் மாதம் அரசினரால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(உ) மதுரைக்குக் கீழே சுமார் 2 மைலில் வீரகனூர் என்னுமிடத்தில் பொறிமதகு ஒன்றும், முதல் பொறிமதகுக்குக் கீழே சுமார் 32 மைலில் பார்த்திபனூர் என்னுமிடத்தில் மற்றொரு பொறிமதகுமாக இரு பொறிமதகுகள் கட்டுவதற்கு இத் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய பொறிமதகுகளின் இரு பக்கத்திலும் பொதுக் கால்வாய்கள் வெட்டப்படும். இவற்றின் மூலம் இப்போதுள்ள வைகை நீர் பாயும் வாய்க்கால்களிலும், ஏரிகளிலும் நீர் நிரம்பும். நீர் வரவுக்கு வைகையை நம்பியுள்ள 62 ஏரிகளின் கீழ் 5.047 ஏக்கர் ஆயக்கட்டுக்கு நீர் வழங்கப்பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஏரிகள் இப்போது வைகையால் நீர் நிரம்பும் ஏரிகளின் உபரி நீரை நம்பியுள்ளன. உபரி நீரை வாங்கி, குருதுமால், பரளையாறு போன்ற அக்கம் பக்கத்து சிறு ஆற்று வடிநிலப் பகுதிகளில் உள்ள ஏரிகளுக்கு அனுப்புவதற்காக, பெரிய வாய்க்கால் பிரியுமிடங்களில் தலை மதகுகள் கட்டப்படும். இத் திட்டத்தின் மூலம் 10,000 ஏக்கர் பாசனம் பெறாத ஆயக்கட்டுக்குப் பாசனம் கிடைக்கும். மேலும் 95,882 ஏக்கருக்குப் பாசன வசதி உறுதிப்படும். இதனால் ஏற்படும் கூடுதல் உணவு உற்பத்தி 18,935 டன் ஆகும்.